සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

47 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பம்சங்களுள் 'வஸதிய்யா' எனப்படுவது,
(1) உலகமயமானது. (2) பூரணத்துவமிக்கது. (3) நடுநிலைமையானது.
(4) கலப்படமற்றது. (5) யதார்த்தமானது.

**2.** "நாகரிகம் என்பது ஒரு இனத்தின் அல்லது வகுப்பினரின் பண்புகளைக் குறிக்கும்" என்ற கருத்தை முன்வைத்தவர்
(1) அமீர் ஹஸன் சித்தீகி (ரஹ்) ஆவார்.
(2) இமாம் கஸ்ஸாலி (ரஹ்) ஆவார்.
(3) இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) ஆவார்.
(4) முஹம்மத் அப்துஹு (ரஹ்) ஆவார்.
(5) இப்னு கல்தூன் (ரஹ்) ஆவார்.

**3.** அல்-குர்ஆன் அருளப்பட்ட முறை, அதன் வரலாற்றுப் பின்னணி ஆகிய விடயங்களை விளக்கும் கலை
(1) இல்முல் ஹதீஸ் (2) இல்முல் அகீதா
(3) இல்முத் தஸவ்வுப் (4) இல்முத் தப்ஸீர்
(5) இல்முல் மீராஸ்

**4.** ஜாஹிலிய்யாக் கால நகர நிர்மாணத்தின்போது அரேபியர் தம் ஒவ்வொரு கோத்திரத்திற்காகவும் ஒதுக்கிக்கொண்ட நிலப்பகுதி,
(1) கபீலா எனப்படும். (2) அஸபா எனப்படும். (3) ஹைமா எனப்படும்.
(4) மஜன்னா எனப்படும். (5) கதீஆ எனப்படும்.

**5.** "மனித இனத்தின் எல்லாச் செயற்பாடுகளுக்குமுரிய அறம் சார்ந்த அடிப்படையே சமயமாகும்" என்ற கருத்தை முன்வைத்தவர்
(1) அரிஸ்டோடல் (2) காந்தி (3) சிஸ்ரோ
(4) கன்பூசியஸ் (5) பிளேட்டோ

**6.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - இஜ்திஹாதுக்கு இடமளிக்கிறது.
B - மனித சிந்தனைக்கு முழுமையாக வாய்ப்பளிக்கிறது.
C - சட்டங்களுக்கான நோக்கங்களை முன்வைக்கிறது.
D - முன்னைய வேதங்களின் சட்டங்களை அங்கீகரிக்கிறது.
E - மாறும், மாறா விதிகளை கவனத்திற் கொள்கிறது.

மேற்குறிப்பிட்டவற்றுள் சட்டவாக்கத்தின்போது அல்-குர்ஆனிய வழிகாட்டலில் காணப்படும் சிறப்பம்சங்களை மாத்திரம் கொண்ட விடைத்தொகுதி
(1) A, B, D (2) A, B, E (3) A, C, D (4) A, C, E (5) A, D, E

7. ஒற்றை, இரட்டை புள்ளிகளற்ற நேர்கோடுகள், கோணங்கள் என்பவற்றைக் கொண்ட அரபு எழுத்து வடிவம்
(1) கூபி (2) அர்ரிகா (3) தவ்கி (4) நஸ்தலிக் (5) நஸ்கு

8. குஸை இப்னு கிலாப் என்பவர் தமது நிர்வாகப் பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைத்துக் கொண்ட சபை
(1) தாருல் ஹிக்மா (2) தாருல் ஈமான் (3) தாருல் அர்கம் (4) தாருன் நத்வா (5) தாருஸ் ஸலாம்

9. தர்தீபுன் நுஸுல், தர்தீபுத் திலாவத் எனும் பதங்கள் குறிப்பது முறையே
(1) ஓதும் ஒழுங்கு, அருளப்பட்ட ஒழுங்கு
(2) அருளப்பட்ட ஒழுங்கு, தொகுக்கப்பட்ட ஒழுங்கு
(3) தொகுக்கப்பட்ட ஒழுங்கு, அருளப்பட்ட ஒழுங்கு
(4) அருளப்பட்ட ஒழுங்கு, பாதுகாத்த ஒழுங்கு
(5) அருளப்பட்ட ஒழுங்கு, ஓதும் ஒழுங்கு

10. 'அல்ஹாவி' எனும் புகழ்பெற்ற மருத்துவ நூலின் ஆசிரியர்
(1) அலி இப்னு ஸீனா (2) எட்வர்ட் ஜென்னரே
(3) அபூ பக்ர் ஸகரிய்யா அர்ராஸி (4) கம்ஸ்டன்
(5) கெலன்

11. பேராசிரியர் சீ. ஏ. நல்லினோவினால் நபி (ஸல்) அவர்கள் பற்றிக் கூறப்பட்ட கருத்து
(1) அவர் ஆன்மீகத்தை மட்டும் போதித்தார் என்பதாகும்.
(2) அவர் ஏக காலத்தில் மார்க்கத்தையும் அரசையும் கட்டியெழுப்பினார் என்பதாகும்.
(3) அவர் அரசு ஒன்றினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டிருந்தார் என்பதாகும்.
(4) அவர் வியாபார சமூகம் ஒன்றினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டிருந்தார் என்பதாகும்.
(5) அவர் அடிமை விடுதலைப் போராட்டத்திற்கு முன்னுரிமை வழங்கினார் என்பதாகும்.

12. "மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை" என்ற அல்-குர்ஆன் வசனம் உணர்த்தும் சரியான கருத்து
(1) மதச் சுதந்திரத்தை அனுமதிக்கிறது என்பதாகும்.
(2) மதச்சார்பற்ற போக்கிற்கு வழிவகுக்கிறது என்பதாகும்.
(3) சமய நம்பிக்கைகள் மாறும் தன்மை கொண்டது என்பதாகும்.
(4) பிற சமய நம்பிக்கைகள் பற்றி விவாதிக்கத் தூண்டுகிறது என்பதாகும்.
(5) கால சூழலுக்கு ஏற்ப மார்க்கத்தை விட்டுக்கொடுக்க அனுமதிக்கிறது என்பதாகும்.

13. பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - வஹி முற்றுப் பெற்றிருக்காமை
B - ஹாபிழ்கள் குறைவாகக் காணப்பட்டமை
C - நபி (ஸல்) அவர்கள் உயிருடன் வாழ்ந்தமை
D - தொகுப்பதற்கு அனுமதிக்கப்படாமை
E - தொகுப்பதற்கான வளங்கள் காணப்படாமை

மேற்குறிப்பிட்டவற்றுள் நபி (ஸல்) அவர்களது காலத்தில் அல்-குர்ஆன் நூலுருப் **பெறாமைக்குப்** பிரதான காரணிகளாகக் கருதப்படும் விடயங்களைக் கொண்ட விடைத்தொகுதி
(1) A, B, D (2) A, B, E (3) A, C, D (4) B, C, E (5) B, D, E

14. 'இஜ்மாஉஸ் ஸுகூத்' என்பதன் மிகச் சரியான விளக்கம்
(1) ஒரு ஸஹாபியினால் முன்வைக்கப்படும் கருத்து மறுக்கப்படுதலாகும்.
(2) இமாம்களின் ஒன்றுபட்ட கருத்துக்களாகும்.
(3) ஒரு ஸஹாபியால் முன்வைக்கப்பட்ட கருத்து, மக்களிடையே பிரபல்யம் அடைந்து, எவ்வித எதிர்ப்பும் இல்லாதிருத்தலாகும்.
(4) சமகால ஷரீஆத் துறை அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும்.
(5) மக்களின் ஏகோபித்த முடிவாகும்.



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**15** தொடக்கம் **17** வரையான ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் தகவல்கள் சில தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால், அவை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. **X** நிரலில் உள்ள விடயங்களுக்கு ஏற்ப **Y** நிரலில் உள்ள விடயங்களை சரியாக ஒழுங்குபடுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானங்களைத் தெரிவுசெய்க.

**15.**

| X | Y |
|---|---|
| (i) பத்தேபூர் சீக்ரி | A - குதுப்தீன் ஐபக் |
| (ii) குவ்வதுல் இஸ்லாம் மஸ்ஜித் | B - மன்னர் ஷாஜஹான் |
| (iii) பானத் சுஆத் | C - அப்பாசியர்கால கோட்டை |
| (iv) டில்லி ஜாமிஆ மஸ்ஜித் | D - மன்னர் அக்பர் |
| (v) கஸ்ருல் சஹுப் | E - கவிஞர் சுஹைல் |

(1) A, E, B, C, D (2) B, D, A, C, E (3) C, B, A, E, D (4) D, A, E, B, C (5) E, B, A, C, D

**16.**

| X | Y |
|---|---|
| (i) மகாவம்சம் | A - யோனஸ் |
| (ii) யவன | B - W. கைகர் |
| (iii) சந்தேச இலக்கியம் | C - 2ஆம் புவனேகபாகு |
| (iv) குருநாகல் இராஜதானி | D - இப்னு பதூதா |
| (v) பாவாத மலை | E - யொன்லிய |

(1) A, D, E, B, C (2) B, A, E, C, D (3) C, B, D, A, E (4) D, A, E, C, B (5) E, B, D, A, C

**17.**

| X | Y |
|---|---|
| (i) கஸ்னவி | A - எகிப்து |
| (ii) தூலூனி | B - குராசான் |
| (iii) புவைஹித் | C - ஆப்கானிஸ்தான் |
| (iv) ஸெல்ஜூக் | D - பக்தாத் |
| (v) அய்யூபி | E - தைலம் |

(1) A, D, C, B, E (2) B, E, C, D, A (3) C, A, E, B, D (4) D, B, A, E, C (5) E, C, A, D, B

**18.** கலீபா உமர் (ரழி) அவர்களின் நிர்வாகத்தின் கீழ் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?

(1) வலி (2) நாஇப் (3) காழி (4) இமாம் (5) அமீர்

**19.** எகிப்திய நாகரிகத்துடன் தொடர்புபடும் நதியைக் குறிக்கும் விடை

(1) யூப்பிரடீஸ் (2) குவாங்கோ (3) தைக்ரீஸ் (4) சிந்து (5) நைல்

**20.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - அல்-குர்ஆனிய வசனங்களைக் கொண்டு அல்-குர்ஆன் வசனங்களை விளங்குதல்
B - இஜ்திஹாதின் மூலம் விளங்குதல்
C - சுன்னாவின் துணைகொண்டு விளங்குதல்
D - மூத்த நபித்தோழர்களிடம் கேட்டறிவதன் மூலம் விளங்குதல்

மேற்குறிப்பிட்டவற்றுள் நபித்தோழர்கள் அல்-குர்ஆனை விளங்குவதற்குக் கையாண்ட சரியான ஒழுங்குமுறைகளைக் கொண்ட விடைத்தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, C, D, B (2) B, D, C, A (3) C, B, A, D (4) D, A, C, B (5) D, B, C, A

● இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுடன் தொடர்புபடும் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு **21** தொடக்கம் **25** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - லேகம்
B - காலித் பின் பகாயா
C - மகா பராக்கிரமபாகு
D - அந்தரங்க துரே
E - ஷேக் அப்துல் காதர் ஆலிம்
F - தாகூர்
G - வயம்பலங்காவே ராஜதானி
H - அபூ உஸ்மான்
I - 2ஆம் புவனேகபாகு
J - புதூஹுல் புல்தான்
K - இப்னு பதூதா

**21.** இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைக் குறிப்பிடும் நூல்கள்
(1) B, C (2) D, E (3) E, G (4) G, J (5) I, J

**22.** இலங்கை மன்னர்களின் ஆட்சியின்போது முஸ்லிம்கள் வகித்த பதவிகள்
(1) A, D (2) B, F (3) E, I (4) F, H (5) I, J

**23.** ஆரம்பகால இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுடன் தொடர்புபடும் அரேபியர்
(1) A, C (2) B, K (3) C, H (4) D, F (5) E, H

**24.** மன்னர்களின் காலப்பகுதியில் வெளிநாட்டு உறவுகளில் பங்கெடுத்த முஸ்லிம் பிரதானிகள்
(1) B, E (2) D, I (3) E, F (4) E, H (5) F, J

**25.** உள்நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் பங்களிப்பினை உரியவாறு பயன்படுத்திக் கொண்ட மன்னர்கள்
(1) A, D (2) B, C (3) C, I (4) E, F (5) F, I

**26.** பைதுல் முகத்தஸ் அமைந்துள்ள பிரதேசத்தை மீட்டெடுத்த தளபதிகளுள் ஒருவர்
(1) முஹம்மத் பின் காஸிம் (2) தாரிக் பின் ஸியாத்
(3) அஹ்மத் சித்தில்லி (4) ஹஜ்ஜாஜ் பின் யூசுப்
(5) சலாஹுத்தீன் அய்யூபி

**27.** பின்வரும் விடயங்களைக் கருதுக.
A - எழுத வாசிக்கத் தெரியாதிருந்தமை
B - உரைநடை இலக்கியம் வளர்ச்சியடைந்தமை
C - எழுத்து வழக்கும், எழுத்துச் சான்றுகளும் அரிதாக இருந்தமை
D - அதிகமான கவிதைத் தொகுப்புகள் காணப்பட்டமை
E - எதுகை, மோனையில் அமைந்த வசன நடை காணப்பட்டமை

மேற்குறிப்பிட்டவற்றுள் ஜாஹிலிய்யாக் காலத்தில் கவிதை இலக்கியம் வளரச்சியடைந்தமைக்கான காரணிகள்
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) A, C, E (5) B, D, E

**28.** மாதுரு ஓயாவில் கண்டெடுக்கப்பட்ட வெள்ளநீர் கட்டுப்பாட்டு வாசல் (sluice gate) இனைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அது பின்வரும் எப்பிரதேசங்களைச் சார்ந்தது என உறுதிப்படுத்தப்பட்டது?
(1) எகிப்து, மெசபதோமியா, வட அரேபியா
(2) வட அரேபியா, எகிப்து, சிந்து
(3) சீனா, மெசபதோமியா, எகிப்து
(4) சிந்து, மெசபதோமியா, வட அரேபியா
(5) சிந்து, சீனா, வட அரேபியா

**29.** நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை இலங்கை மன்னனிடம் ஒப்படைக்க வருகை தந்த தூதுவர்
(1) அம்ர் பின் ஆஸ் (ரழி) (2) தமீம் அல்-அன்ஸாரி (ரழி)
(3) முஸ்அப் பின் உமைர் (ரழி) (4) வஹ்ப் இப்னு அபீ கப்ஸா (ரழி)
(5) முஆத் பின் ஜபல் (ரழி)

**30.** இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியாவில் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் அழைக்கப்பட்ட முறை
(1) ஹர்பிய்யூன் (2) குத்தாபூன் (3) உம்மிய்யூன்
(4) முவஹ்ஹிதூன் (5) மஜூஸிய்யூன்


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**31.** X நிரலில் சில முஜத்திதீக்களின் பெயர்களும் Y நிரலில் அவர்களுடன் தொடர்புபடும் விடயங்களும் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| (i) மௌலானா இல்யாஸ் (ரஹ்) | A - தப்ஹீமுல் குர்ஆன் |
| (ii) மௌலானா மௌதூதி (ரஹ்) | B - பத்ஹுர் ரப்பானி |
| (iii) இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) | C - ஜமாஅத் தப்லீக் |
| (iv) அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்) | D - தௌஹீத் |
| (v) ஷேக் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) | E - நத்வதுல் உலமா |

X நிரலுக்கேற்ப Y நிரலிலுள்ள விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) A, D, C, B, E (2) B, A, E, D, C (3) C, A, D, E, B (4) D, A, B, E, C (5) E, A, C, B, D

**32.** X, Y ஆகிய நிரல்களில் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. Y நிரலில் உள்ளவை X நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒருவகையில் தொடர்புபட்டவை, ஆனால் அவை ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன.

| X | Y |
|---|---|
| (i) இஸ்னா அஷரிய்யா | A - ஒரு வசனம் மற்றொரு வசனத்தை மாற்றும் நிலை |
| (ii) அஸ்மாஉர் ரிஜால் | B - ஷரீஆவின் சகல துறைகளையும் உள்ளடக்கி மேற்கொண்ட முடிவு |
| (iii) இஜ்திஹாத் குல்லி | C - ஹதீஸ் அறிவிப்பாளர், அதன் தொடர்வரிசை என்பன பற்றிய விபரம் |
| (iv) தக்லீத் | D - தமது வழிகாட்டிகளாக 12 இமாம்களை மாத்திரம் வரையறுத்துக் கொண்டவர்கள் |
| (v) அன் நாஸிக் வல் மன்சூக் | E - மார்க்க விவகாரங்களை ஆய்வின்றிப் பின்பற்றுதல் |

X நிரலுக்கேற்ப Y நிரலிலுள்ள விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) A, C, B, E, D (2) B, A, D, E, C (3) C, B, A, E, D (4) D, C, B, E, A (5) E, B, A, D, C

**33.** தஜ்தீத் என்பது
(1) சீர்குலைந்துள்ள ஒன்றைப் புனரமைத்தலாகும்.
(2) நடைமுறையிலுள்ள சட்டம் ஒன்றை அகற்றிப் புதியதொன்றை உருவாக்குதலாகும்.
(3) சன்மார்க்கத்தை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளாகும்.
(4) மார்க்கத்தில் நூதனங்களைப் புகுத்துதலாகும்.
(5) கருத்து வேற்றுமைகளைத் தோற்றுவித்தலாகும்.

**34.** 'நபி தாவூத் (அலை) அவர்களின் சமூகத்தின் புல்லாங்குழல்களுள் ஒருவர்' என வர்ணிக்கப்பட்ட ஸஹாபி
(1) பிலால் பின் ரவாஹா (ரழி) (2) அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி)
(3) ஸைத் பின் ஸாபித் (ரழி) (4) உஸ்மான் பின் அப்பான் (ரழி)
(5) அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி)

**35.** இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட நூல்கள் மாத்திரம் அடங்கிய விடைத்தொகுதி
(1) அல்பதாவா, அல் அஸ்மாஉ வஸ்ஸிபாத்
(2) பத்ஹுர் ரப்பானி, குன்யதுத் தாலிபீன்
(3) ஸகாபதுல் பலாஸிபா, முன்கித் மினல் ழலால்
(4) கிதாபுல் உம்மு, உம்ததுஸ் ஸாலிஹ்
(5) தப்ஸீர் இப்னு கஸீர், தப்ஸீர் குர்ஆனில் அழீம்

As-Sheikh ANM. Junaid (Naleemi)
SLTS, Dip. in Edu, BA, M.Ed
Justice Of the Peace (Whole Island)
138/A, Al-Munawwera Road, Akkaraipattu
0772206294 / 0713167024

**36.** மொகலாய மன்னர் அக்பர் மார்க்கம் பற்றிக் கொண்டிருந்த பிழையான கருத்துக்கெதிராகக் குரல் கொடுத்த சிந்தனையாளர்
(1) அல்லாமா இக்பால் (ரஹ்) (2) ஷிப்லி நுஃமானி (ரஹ்)
(3) அஷ்ரப் அலி தானவி (ரஹ்) (4) ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி (ரஹ்)
(5) ஷேகு அஹ்மத் சிர்ஹிந்தி (ரஹ்)

**37.** 19 ஆம் நூற்றாண்டில், சமூகவியல் சிந்தனையைக் கருப்பொருளாகக் கொண்டு வெளிவந்த தப்ஸீர் நூல்
(1) அல் - ஜலாலைன் (2) அல் - பைழாவி (3) அல் - குர்துபி
(4) அல் - மனார் (5) அல் - ஆலூஸி

**38.** இஸ்லாமிய உலகில் பிரபல்யம் வாய்ந்த அலக்ஸான்திரிய்யா, ஜாமிஆ மில்லிய்யா ஆகிய பல்கலைக்கழகங்கள் அமைந்துள்ள நாடுகள் முறையே

(1) எகிப்து, இந்தியா (2) ஈரான், ஸ்பெய்ன் (3) ஸ்பெய்ன், இந்தியா
(4) டியூனிசியா, இந்தியா (5) எகிப்து, துருக்கி

**39.** வணிகப் பயணங்களின்போது முஹம்மத் (ஸல்) அவர்களிடம் காணக்கிடைத்த நற்பண்புகளை, கதீஜா அம்மையாரிடம் எடுத்துக் கூறிய பணியாளர்

(1) அந்தரா (2) மைசரா (3) ஸன்பரா (4) தரபா (5) ஹன்ழலா

**40.** இப்னு கல்தூன் அவர்களால் எழுதப்பட்ட வரலாற்றுத்துறை நூல்

(1) தாரீக் திமிஷ்க் (2) அஸ்ஸீரா வத்தாரீக் (3) அல் - முகத்திமா
(4) தாரீக் தபரி (5) அல்-பிதாயா வன்னிஹாயா

**41.** புவைஹித் சிற்றரசு ஆட்சியாளர் அஹ்மத் புவைஹி என்பவருக்கு 'முஇஸ்ஸுத் தௌலா' எனும் சிறப்புப் பெயர் வழங்கப்பட்டமைக்கான காரணம்

(1) பாதிமிய்ய சிற்றரசுக்கு எதிராகப் போராடியமை ஆகும்.
(2) துருக்கிய படையினைக் கட்டுப்படுத்தியமை ஆகும்.
(3) பாரசீகப் படையைக் கட்டுப்படுத்தியமை ஆகும்.
(4) கொன்ஸ்தாந்துநோபில் வெற்றி கொள்ளப்பட்டமை ஆகும்.
(5) பைதுல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்டமை ஆகும்.

**42.** "அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள்" எனும் அல்-குர்ஆன் வசனத்திலுள்ள மகாஸித் ஷரீஆவைப் புலப்படுத்தும் கருத்து

(1) பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஆத்மார்த்த உறவு என்பதாகும்.
(2) கணவன், மனைவி இருவரும் ஒரே வகையான ஆடையை அணிதல் என்பதாகும்.
(3) கணவன், மனைவி இருவரும் மதத் தெரிவுச் சுதந்திரத்துடன் வாழ்தல் என்பதாகும்.
(4) கணவன், மனைவி இருவருக்கும் இடையிலான ஆத்மார்த்த உறவு என்பதாகும்.
(5) கணவன், மனைவி இருவருக்கும் சொத்தில் சம பங்குண்டு என்பதாகும்.

**43.** உமையா அரசு வீழ்ச்சியுற்றபோதும் அது மீளவும் தோற்றுவிக்கப்பட்ட பிரதேசம்

(1) மதீனா (2) நஜ்த் (3) ஸ்பெய்ன் (4) சிரியா (5) ஹழரமௌத்

**44.** விஜயபாகு மன்னனின் அரச செயற்பாடுகளில் விசுவாசமாகச் செயற்பட்ட முஸ்லிம் பிரமுகர்களுள் ஒருவர்

(1) சுல்தான் ஜமால்தீன் (2) ஷேக் ஆலிம்
(3) உதுமான் லெப்பை (4) மீராலெப்பை மேஸ்தியா
(5) பெரியதம்பி மரைக்கார்

**45.** "போதையை ஏற்படுத்தக்கூடியவை யாவும் இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவைகளாகும். இதன்படி தற்கால புழக்கத்தில் உள்ள உருமாற்றம் பெற்ற போதைப்பொருள் உற்பத்திகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டவைகளாகும்." ஷரீஆவின் இத்தீர்வு பின்வருவனவற்றுள் எவ்வகையைச் சார்ந்ததாகும்?

(1) கியாஸுல் முஸாவி (2) கியாஸுல் அத்னா (3) இஜ்மாஉ முரக்கப்
(4) இஜ்மாஉ சுகூதி (5) உர்ப் காஸ்



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

- **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அச்சோடிகள் பற்றிய மிகப்பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | தாபிஊன்கள் கால அறிஞர்கள் ஹதீஸ்களை ஒன்றுதிரட்டிப் பாதுகாக்கும் பணிக்கு பிரதான வழிமுறைகளை அறிமுகம் செய்தனர். | முஸ்னத் அஹ்மத் எனும் ஹதீஸ் நூல் தாபிஊன்கள் காலத்தில் தொகுக்கப்பட்டதாகும். |
| **47.** | மு.ஃ.தஸிலாக்கள் பகுத்தறிவையும் தத்துவ ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்டு இறையியற் கோட்பாட்டை விளக்கியவர்களாவர். | உமைய்யா ஆட்சியாளர் ம.ஃ.மூனின் காலத்தில் மு.ஃ.தஸிலாக் கொள்கை அரச அங்கீகாரம் பெற்றது. |
| **48.** | சித்தாந்த எனும் சமஸ்கிருத வானவியல் நூல் அல்-பஸாரி என்பவரால் அரபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. | மொகாலயர் ஆட்சியின்போது இந்தியாவில் முஸ்லிம்கள் வானவியல் துறைக்கு பங்காற்றினர் என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. |
| **49.** | ஒல்லாந்தர் இலங்கை முஸ்லிம்களுடன் முரண்பாடு கொண்டிருந்தமையால் தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்ள இந்தோனேசியாவிலிருந்து மலாயர்களை அழைத்து வந்தனர். | போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரால் புறக்கணிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம்கள் கண்டி மன்னர்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டனர். |
| **50.** | மறு உலக வாழ்வில் ஒவ்வொரு தனிமனிதனும் தனியாகவே விசாரிக்கப்படுவான். | ஒவ்வொரு தனிமனிதனும் தனது இறைவன், ஆன்மா, குடும்பம் மற்றும் சமூகம் சார்ந்த விடயங்கள் பற்றி விசாரிக்கப்படுவான். |

❊ ❊ ❊

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி அருளப்பட்ட நிகழ்வுடன் தொடர்புறும் விடயங்கள் **நான்கினை** விளக்குக.

(ii) அபூ பக்ர் சித்தீக் (ரழி) அவர்கள் கிலாபத்தை ஏற்றதும் இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளுள் **நான்கினைத்** தருக.

(iii) கலீபா உமர் (ரழி) அவர்கள் மேற்கொண்ட நிர்வாகக் கட்டமைப்பின் அம்சங்கள் **நான்கினை** விளக்குக.

(iv) கலீபா முஆவியா (ரழி) அவர்கள் உமையா கிலாபத்தினை ஸ்திரப்படுத்துவதற்கு மேற்கொண்ட பணிகள் **நான்கினை** விளக்குக.

(v) கலீபா வலீத் பின் அப்துல் மலிக் அவர்கள் இராச்சிய விஸ்தரிப்பிற்கு ஆற்றிய பங்களிப்புகளுள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**2.** (i) முஹம்மத் (ஸல்) அவர்கள் நுபுவ்வத்துக்கு முன்னர் மேற்கொண்ட முன்மாதிரிமிக்க செயற்பாடுகளை விளக்குக.

(ii) இஸ்லாமிய நாகரிக மேம்பாட்டுக்கு ஸுன்னாவின் வழிகாட்டல்கள் **நான்கினைத்** தருக.

(iii) அல்-குர்ஆன் தொகுப்பின் மூன்றாம் காலகட்ட நடவடிக்கைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(iv) இஜ்திஹாதின் அடியாகத் தோன்றிய துணை மூலாதாரங்களைப் பட்டியற்படுத்துக.

(v) இறை சட்டத்தின் சிறப்பியல்புகளுள் **நான்கினை** விளக்குக.

(04 × 5 = 20 புள்ளிகள்)

**3.** (i) முஸ்லிம்களைப் புவியியற்துறை வளர்ச்சியில் ஈடுபடத்தூண்டிய காரணிகளுள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(ii) ஆரம்பகால முஸ்லிம்களிடையே மொழிபெயர்ப்புத் துறை வளர்ச்சியடைவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகளுள் **நான்கினைத்** தெளிவுபடுத்துக.

(iii) ஆரம்பகால முஸ்லிம்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் குடியேறி வாழ்ந்தமைக்கான காரணிகளுள் **நான்கினை** விளக்குக.

(iv) இஸ்லாத்தில் பெண்ணுரிமை பற்றிய கருத்துக்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக.

(v) ஒரு மனிதன் தன் இரட்சகனுடன் உறவைப் பலப்படுத்திக்கொள்ள மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகளுள் **நான்கினை** விபரிக்க.

(04 × 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) முன்மாதிரிமிக்க சமூகம் ஒன்றினை உருவாக்குவதில் மஸ்ஜிதுன் நபவி முன்னெடுத்த பணிகளை விளக்குக.

(ii) ஹதீஸ் ஒரு தனிக்கலையாக வளர்வதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகளைத் தெளிவுபடுத்துக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**5.** (i) இஸ்லாமிய நாகரிகம் உலகுக்கு வழங்கிய முன்மாதிரிகளைத் தெளிவுபடுத்துக.

(ii) மகாஸித் ஷரீஆவின் பிரதான பரிமாணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**6.** (i) இஸ்லாமிய அரசியலில் கிலாபதுர் ராஷிதா கொண்டிருந்த சிறப்பம்சங்களை விபரிக்க.

(ii) இருபதாம் நூற்றாண்டில் இந்திய உபகண்டத்தில் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்ட முஜத்தித்களுள் ஒருவர் பற்றி விளக்குக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் அரேபிய வர்த்தக உறவு ஏற்படுத்திய விளைவுகளை விபரிக்க.

(ii) இலங்கை முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களுடன் கொண்டிருந்த நல்லுறவினை வரலாற்றுச் சான்றுகள் மூலம் எடுத்துரைக்க.

(10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** (i) அப்பாஸிய ஆட்சி வீழ்ச்சியுற்றமைக்கான காரணங்களை விபரிக்க.

(ii) அகபா உடன்படிக்கை ஏற்படுத்திய சாதகமான விளைவுகளைத் தெளிவுபடுத்துக.

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *




අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL
Book Store

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!